# திருப்பலிப் பாடல்கள்
# ஆண்டவருடைய திருப்பாடுகளின்
# குருத்து ஞாயிறு-- 2016

**1.வருகைப்பாடல்**

இதோ இதோ ஒரு யாத்திரை - உம்
இரக்கம் வேண்டும் திரு யாத்திரை (2)
இதயத்தை தகர்க்கும் இடர்பாடிடையே
உம்மையே நம்பும் யாத்திரை -2

ஓ இறைவாஓ நல்லவரே
என்கூக்குரல்கேட்டருளும்.2
ஓ இறைவா ஓ வல்லவரே
எம்மைக் காத்திட எழுந்தருளும் (2)

கடற்கடந்த எம் யாத்திரை எம்கைவிலங்கு
தகரவே
உடலுயிர்மறந்து போராடும்யாம்

உம்துணையில் வெல்லவே (2)
ஒடுக்கப்பட்டோரின் உயிர்ப்பே
எம்மை உரிமைக் குலமாக்குமே - 2

இதயத்தினால் ஒரு யாத்திரை உம்
இன்னுறவைஅடையவே
கதியற்றுவாடும்சோதரர்க்குகைகொடுத்துவாழவே.2

பகையற்றுவாழும்அன்பின்உலகை
உரிமையாய்த் தாருமே (எமக்கு) 2

இந்த பாடல்களின் MP3 வடிவம்
**www.tamilcatholicnews.com**
என்ற எமது இணையத்தளத்தில்
தரவிறக்கம் செய்யலாம்.

**7.நன்றிப் பாடல்**

இயேசுவின் பின்னால் நானும் செல்வேன்
திரும்பிப் பார்க்கமாட்டேன் - 2
சிலுவையே முன்னால் உலகமே பின்னால் - 2
இயேசு சிந்திய குருதியினாலே விடுதலை
அடைந்தேனே

அச்சமும் இல்லை அதிர்ச்சியும் இல்லை
அடியேன் உள்ளத்திலே
ஆண்டவர் இயேசு அடைக்கலப் பாறை
ஆதலின் குறையில்லை
ஆண்டவர் முன்னால் அகிலமே பின்னால் - 2
அன்பர் இயேசுவின் வார்த்தையினாலே
விடுதலை அடைந்தேனே

தாயும் அவரே தந்தையும் அவரே தரணியில்
நமக்கெல்லாம்
சேயர்கள் நம்மைச் செவ்வழி நடத்தும் தெய்வம்
அவரன்றோ

ஆயனே முன்னால் அலகையே பின்னால் - 2
அழைக்கும் இயேசுவின் அன்பு மொழியிலே
ஆறுதல் அடைந்தேனே

**8.மாதா பாடபாடல்**

அமலோற்பவியே அருள்நிறை தாயே வாழ்க
வாழ்க
மாசறு கன்னியே மாபரன் தாயே வாழ்க
வாழ்க (2)
வாழ்க தாயே வாழ்க நீயே வாழ்க வாழியவே
அன்னையே வாழ்க அமலியே வாழ்க - வாழ்க
வாழியவே

மாமரியே மாதவளே வாழ்க வாழ்க
மாந்தர்களைகாப்பவளேவாழ்கவாழ்க(2)
மனமகிழ்ந்துபாடிடுவோம்வாழ்கவாழ்க
தினம் நினைந்து பாடிடுவோம் வாழ்க வாழ்க

இறைமகனின்திருத்தாயேவாழ்கவாழ்க
மறைபோற்றும்பேரெழிலேவாழ்கவாழ்க(2)
வான்மண்ணின்ராக்கினியேவாழ்கவாழ்க
வாழ்த்துகிறோம் போற்றுகிறோம் வாழ்க
வாழ்க

**2.தியானப்பாடல்**

நீ எந்தன் பாறை என் அரணான இயேசுவே - 2
நீ எந்தன் உள்ளத்தின் அணையாத தீபமே
அணையாத தீபமே இயேசுவே இயேசுவே - 2
ஒளி கொண்டு தேடினால் இருள் நில்லுமோ
உன் துணையில் வாழ்கையில் துயர் வெல்லுமோ- 2 தடைகோடிவரலாம்உள்ளம் தவித்தோடி விடலாம் 2
ஆனாலும்உன்வார்த்தைஉண்டு
எது போனாலும் உனில் தஞ்சம் உண்டு
இயேசுவே இயேசுவே - 2

இரவுக்கும்எல்லைஓர்விடியலன்றோ
முடிவாகவெல்வதும்நன்மையன்றோ-2
தளராதுவாழ்வோம்
அருள்அணையாது காப்போம்-2
என்றென்றும்உன்ஆசீர்கொண்டு
வரும்நல்வாழ்வைக்கண்முன்னேகொண்டு
இயேசுவே இயேசுவே - 2

**3.காணிக்கைப் பாடல்**

பொன்னும் பொருளுமில்லை என்னிடத்தில் ஒன்றுமில்லை
உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் (2)
சொந்தம் பந்தமுமெல்லாம் நீயே எனச் சொல்லி வந்தேன்
எந்தையும் என் தாயும் நீயன்றோ - நீயே
என்னையாளும் மன்னவனன்றோ

நிலையில்லா உலகினில் நிலைத்து நான் வாழ என்
நிம்மதி இழந்து நின்றேன்
வளமில்லா வாழ்வினில் வசந்தங்கள் தேடி நான்
அளவில்லா பாவம் செய்தேன்
தனது இன்னுயிரைப் பலியெனத் தந்தவரே
உனக்கு நான் எதையளிப்பேன்? - இன்று
உனக்கு நான் எனையளித்தேன்
வறுமையும் ஏழ்மையும் பசியும் பிணியும்
ஒழிந்திடஉழைத்திடுவேன்
அமைதியும்நீதியும்அன்பும்அறமும்
நிலைத்திடபணிசெய்வேன்
உன்னததேவனே உமதருட்கருவியாய்
உலகினில் வாழ்ந்திடுவேன் - என்றும்
உன்னிலே வாழ்ந்திடுவேன்

**4.குருத்து ஞாயிறுக்கான ஓசான்னா**

தாவீதின் மகனுக்கு ஓசான்னா
ஆண்டவர் பெயரால் வருகிறவர்
ஆசி நிரம்பப் பெற்றவரே
இஸ்ராயேலின் பேரரசே
உன்னதங்களிலே ஓசான்னா - 2

**5.பரலோகமந்திரம்**

பரலோகத்தில் இருக்கிற
எங்கள் பிதாவே எங்கள் பிதாவே
உம்முடைய நாமம் அர்ச்சிக்கப்படுக,
உம்முடைய இராச்சியம் வருக
உம்முடைய சித்தம் பரலோகத்தில்
செய்யப்படுவது போல பூலோகத்திலும்
செய்யப்படுவதாக
எங்கள்அநுதின உணவை இன்று
எங்களுக்கு அளித்தருளும்.
எங்களுக்கு தீமை செய்வோரை
நாங்கள் பொறுப்பது போல்
எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும்
எங்களைச் சோதனையில் விழவிடாதேயும்
தீமையிலிருந்து இரச்சித்தருளும்.
ஆண்டவரே தீமையில் இருந்து
எங்களை விடுவித்து
எம் வாழ்நாளில் சமாதானத்தை
அருள்புரிய உம்மை மன்றாடுகின்றோம் உமது
இரக்கத்தின் துணையால் நாங்கள்
அடிமையில் இருந்து விடுதலை பெற்று
நிறைவாழ்வு பெறுவோமாக
நாங்கள் நம்பும்பேரின்ப வாழ்வை
இயேசுவின் வருகையை எதிர்பார்க்கின்றோம்
எனெனில் அரசும் வல்லமையும்
மாட்சிமையும் என்றும் உமதே

**6.திருவிருந்துப்பாடல்**

இயற்கையில் உறைந்திடும்இணையற்ற இறைவா
என் இதயத்தில் எழுந்திட வா
என்றும் இங்கு என்னோடு நின்று என்னை அன்போடு
காத்திடு என் தலைவா (2)
உந்தன் அன்பு உறவின்றி எனக்கு இங்கு
சொந்தம் சுற்றம் சூழ்ந்திட பயன் என்னவோ (2)
மெழுகாகினேன் திரியாக வா மலராகினேன் மணமாக வா (2)

உருவில்லா இறைவன் உன் உதவியின்றி
உலகத்தில் எதுவும் நடந்திடுதோ (2)
குயிலாகினேன் குரலாக வா மயிலாகினேன்
நடமாட வா (2)